

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக் கழகத்தின் சார்பில் நேற்று (12.06.2024), சென்னை, வெப்பேரி, பெரியார் திடலில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் 27 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, மண்டலக் குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, திருமதி.சரிதா மகேஷ்குமார். மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம்சுருதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.06.2024) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 81வது மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு விழாவில் கலந்து கொண்டு மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, மருத்துவக்கல்லூரி துணை முதல்வர், மருத்துவமனை கண்காணிப்பாளர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவப் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

# இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பு!

### செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, ஜூன் 13-

கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்க உள்ளதாக மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை பாரதி நகர் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாவட்டக் கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் தி.மு.க. மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க.சுந்தரம், அசோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர்- அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, வரலாற்று வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழாவாக கோவையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணியைச் சார்ந்த நிர்வாகிகள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை செயலாளர்கள், வாக்குச் சாவடி முகவர்கள், கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கோவையில் நடைபெறும்



முப்பெரும் விழாவில் கலந்துகொள்வதென தீர்மானிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை இந்தியா கூட்டணி, கழகத் தலைவர் தலைமையில் வெற்றி பெற்றது. இந்தியாவிலேயே போட்டியிட்ட அத்தனை தொகுதிகளிலும் வெற்றிப் பெற்றது தமிழகத்தில் மட்டும்தான். வரலாற்று வெற்றியை பெற்றுத்தந்த வாக்காளப் பெருமக்களுக்கும், இரவு, பகல் பாராது அயராது உழைத்து, தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்த முதல்வர், இந்தியாவின் வழிகாட்டிய நாயகர், கழகத்தலைவர் அமைச்சர் தளபதி அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

அதேபோன்று நமது மாவட்டத்தில் அரக்கோணம் நாடாளுமன்றத் தேர்தலில் கடுமையாக உழைத்து, அயராது பாடு பட்ட நமது மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்திக்கும் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகி களுக்கும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகளுக்கும், ஊர்கிளை, உட்கிளை செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும், வாக்குச் சாவடி முகவர்களுக்கும் கழகத் தோழர்கள் அனைவருக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், விவசாயிகள், வணிகர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் இக்கூட்டம் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

வருகின்ற ஜூலை 10ம் தேதி விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தலைமைக் கழகம் இடுகிற ஆணையை ஏற்று கழக வேட்பாளர் வெற்றிக்கு அயராது பாடுபடுவதென தீர்மானிக்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

### அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பெ.செந்தில் குமார் அறிக்கை!

திண்டுக்கல், ஜூன் 13-

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி, இ.பெ.செந்தில் குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித்





தலைவர்களும் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என "முப்பெரும் விழா" பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே, இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் என அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### தமிழ்நாடு பதிவெண் இல்லாத

# ஆம்னி பேருந்துகளுக்கு 14ம் தேதி முதல் தடை !

### போக்குவரத்துத் துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 13-

தமிழ்நாட்டில் ஓடும் கணிசமான ஆம்னி பேருந்துகள் தமிழக பதிவெண்ணுடன் இருப்பதில்லை. கர்நாடகா, புதுச்சேரி, அஸ்ஸாம் உள்பட வேறு மாநிலங்களில் பதிவு செய்து தமிழ்நாட்டில் ஓடுகிறது. இப்படி வெளிமாநில பதிவெண் கொண்ட 652 ஆம்னி பேருந்துகளால் ஆண்டொன்றுக்கு தமிழக அரசுக்கு ரூ.28.16 கோடி இழப்பு ஏற்படுகிறது. வெளி மாநில பதிவு எண் கொண்ட பேருந்துகளை தமிழகப் பதிவு எண்ணாக மாற்ற வேண்டும் என்று அரசு வலியுறுத்தி வருகிறது.

இதற்கிடையே ஆம்னி பேருந்துகள் சங்கத்தினர் கோரியதை அடுத்து பதிவெண் மாற்றுவதற்கான அவகாசத்தை அரசு நீட்டித்து வந்தது. இந்நிலையில் தமிழ்நாடு பதிவெண் இல்லாத ஆம்னி பேருந்துகளுக்கு இனி அனுமதி இல்லை என அரசு போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- இனி உரிய தமிழக பதிவெண் இல்லாமல், தமிழ்நாட்டின் அனுமதிச் சீட்டு பெறாமல் உள்ள ஆம்னி பேருந்துகள் வரும் ஜூன் 14ம் தேதி முதல் மாநிலத்தில் இயங்க அனுமதி இல்லை

எனவே முறையற்ற வகையில் வெளி மாநிலங்களில் பதிவு செய்து இயங்கும் வெளி மாநில பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்துகளில் இனி பயணிகள் பயணம் செய்வதை முற்றிலும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மீறி பயணம் செய்தால் அரசு அதற்கு பொறுப்பேற்காது. மேலும் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு அந்தந்த ஆம்னி பேருந்து உரிமையாளர்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை வடகிழக்கு மாவட்டம், புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்விழா மற்றும் 40/40 வெற்றி விழாவை முன்னிட்டு ஒருநாள் எழுவர் கால்பந்தாட்ட போட்டி கடந்த 09.06.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் விளையாட்டுதிடலில் புழல் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் புழல் பெ.சரவணன் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம்.எஸ்சுதர்சனம் எம்.எல்.ஏ. போட்டியை துவங்கி வைத்து பரிசுகள் வழங்கினார்.

### மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் - தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை

# கணக்கெடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

### மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஜூன்.13-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை கணக்கெடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் இன்று (12.06.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியில் வசிக்கும் பொதுமக்களை வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா மாநகரமாக சென்னையை உருவாக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவு ஆகியவற்றின் சார்பில் தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (Anti Rabies Vaccine) மற்றும் அகப்புற ஒட்டுண்ணியை (Endecto Parasiticide) நீக்க அதற்கான மருந்தினை செலுத்தும் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களுடைய செல்லப்பிராணிகளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பொழுது கழுத்துப்பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும், செல்லப்பிராணிகளை வளர்ப்போர் அதிக கவனம் செலுத்தி மற்றவருக்கு தங்களுடைய செல்லப் பிராணிகளால் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பில் அக்கறை கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களின் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ள தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, உலகளாவிய கால்நடை சேவை நிறுவனம் (Worldwide Veterinary Services (WVS)), தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் மற்றும் தன்னார்வலர்களுடன் இணைந்து தெருநாய்களை கணக்கெடுக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தொடங்கப்படவுள்ளது. இந்தக் கணக்கெடுப்புப் பணி நேற்று (12.06.2024) தொடங்கி 2 மாத காலத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் ஐயங்கார் குளம் ஊராட்சியில்மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் திருமதி .நித்யா சுகுமார் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 11 லட்சம் மதிப்பில் குடிநீர் குழாய் இணைப்பு பணியை மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், ஒன்றிய செயலாளர் க. குமணன், வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன், ஊராட்சி மன்ற துணைத் தலைவரும் – மாவட்ட பிரதிநிதி திருநாவுக்கரசு, ஒன்றிய நிர்வாகிகள் கன்னியப்பன், கமலக்கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



**தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.**

**தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**